**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேவகோட்டை.**

**முன்னிலை:- செல்வி. D. பூர்ணிமா, B.A.B.L.(Hons.),LL.M.,**
**நீதித்துறை நடுவர், தேவகோட்டை.**

**2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 05-ம் நாள் வெள்ளிக்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057 விசுவாவசு வருடம் வைகாசி திங்கள் 22-ம் நாள்**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 118/2022**
(குற்ற எண்.11/2021, ஆறாவயல் காவல் நிலையம்)

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
ஆறாவயல் காவல்நிலையம்,
குற்ற எண்.11/2021.

….குற்றமுறையிடுபவர்

/எதிராக/

1.சீனிவாசன் (1 வது எதிரி) (50/2021)
த/பெ. கருப்பையா

2.பாண்டிமீனாள் (2 வது எதிரி) (45/2021)
க/பெ. சீனிவாசன்

3.ராஜாமணி (4 வது எதிரி) (54/2021)
த/பெ. சீனிவாசன்

…..எதிரிகள்

குற்றவியல் நடைமுறை விதிகள், 2019 விதி 106(4)ன் படி வழக்கின்
சுருக்கம்

| வ.எண் | விளக்கம் | விபரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | காவல் உதவி ஆய்வாளர், |

| | | |
|---|---|---|
| | | தேவகோட்டைநகர்<br>காவல்நிலையம்,<br>குற்ற எண்.11/2021. |
| 2. | எதிரிகள் | 1.சீனிவாசன் (1 வது எதிரி)<br>த/பெ. கருப்பையா<br><br>2.பாண்டிமீனாள் (2 வது எதிரி)<br>க/பெ. சீனிவாசன்<br><br>3.ராஜாமணி (4 வது எதிரி)<br>த/பெ. சீனிவாசன்<br>**<u>எதிரிகளின் முகவரி:</u>**<br>மங்கலம், வெங்களூர் அஞ்சல், தேவகோட்டை தாலுகா, சிவகங்கை மாவட்டம். |
| 3. | குற்றச்சாட்டுகள் | 1,2,4 வது எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 323, 506(2)-ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (**இவ்வழக்கின் 3 வது எதிரி கடந்த 09/08/2025 ம் தேதியன்று இறந்துவிட்டதாக அரசு தரப்பில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அவரைப் பொறுத்து மட்டும் வழக்கு அற்றுப்போய்விட்டதாக 03/09/2025 ம் தேதி உத்தரவிடப்பட்டுள்ளது.)** |
| 4. | சம்பவம் நடந்த நாள் | 15/01/2021 |
| 5. | முதல் தகவல் அறிக்கை பதிவு | 16/01/2021 |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யப்பட்ட நாள் | | | |
| 6. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | இல்லை | முன்பிணை பெற்ற நாள்: 22/01/2021 | |
| | பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | இல்லை | | |
| 7. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 07/07/2022 | | |
| 8. | கு.வி.மு.ச பிரிவு 241-ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 18/06/2024 | | |
| 9. | கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள் | ----- | | |
| 10. | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1 | 17/06/2025 | 17/06/2025 |
| | | அ.சா.2 | 17/06/2025 | 17/06/2025 |
| | | அ.சா.3 | 04/08/2025 | 04/08/2025 |
| | | அ.சா.4 | 04/08/2025 | 04/08/2025 |
| | | அ.சா.5 | 04/08/2025 | 04/08/2025 |
| | | அ.சா.6 | 17/02/2026 | 17/02/2026 |
| | | அ.சா.7 | 07/04/2026 | 07/04/2026 |
| 11. | எதிரிகளிடம் குற்றம் குறித்து | 09/04/2026 | | |

| | | | |
|---|---|---|---|
| | பி.என்.எஸ்.எஸ் பிரிவு 351(1)(b)ன் கீழ் வினவிய நாள் | | |
| 12. | எதிரிகளின் மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | பிடியாணை வழங்கப்பட்ட நாள் | பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள் |
| | | ------ | ----- |
| 13. | வழக்கு விசாரணை தொடங்கிய நாள் | 18/06/2024 | |
| 14. | வழக்கு விசாரணை முடிந்த நாள் | 09/04/2026 | |
| 15. | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 05/06/2026 | |
| 16. | தீர்வு | **முடிவாக, 1,2,4 வது எதிரிகள் இதச பிரிவுகள் 294(b), 323, 506(2)-ன் கீழ் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து எதிரிகளை மேற்படி குற்றச்சாட்டுக்களைப் பொறுத்து குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.** | |

இந்த வழக்கானது என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் முன்னிலையாகியும், 1 வது எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.கார்த்தீஸ், அவர்கள் முன்னிலையாகியும், 2,4 வது எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. சிவா, அவர்கள்

முன்னிலையாகியும், அனைத்து தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

**1. குற்றமுறையீட்டின் சுருக்கம்:-**

கடந்த 15/01/2021 ம்தேதி பகல் சுமார் 11.00 மணியளவில் வாதி தன் மனைவி மகளுடன் ஊர் மந்தை முன்பு பொங்கல் வைத்து கொண்டிருக்கும்போது சிறு வேலை காரணமாக வாதியின் மகள் வீட்டுக்கு செல்லும்போது வழியில் எதிரிகள் நான்குபேரும் நின்று கொண்டு வாடி தேவுடியா முண்ட இங்க எங்கடி சொத்து வாங்கவா வந்த என்று தகாத வார்த்தைகளால் அசிங்கமாக பேசியும் உன்னையும் உன் அப்பனையும் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியும் அந்த தகவலை மந்தையில் பொங்கல் வைத்து கொண்டிருந்த தனது பெற்றோரிடம் வாதியின் மகள் நடந்த சம்பவத்தை பற்றி சொல்லிக் கொண்டிருக்கும்போது எதிரிகள் நால்வரும் சம்பவ இடத்திற்கு வந்து 1 மற்றும் 2 வது எதிரிகள் வாதியை கையால் அடித்து தாக்கியும் 3 வது எதிரி 3 வது சாட்சியான வாதியின் மகளை தாக்கியும் அவரது கழுத்தில் கிடந்த தங்க செயினை அத்தும் 4 வது எதிரி சாட்சி 2 ஐ கையால் அடித்து தாக்கியும் பின் 1 வது எதிரி கையில் அருவாளை வைத்துக்கொண்டும் நான்கு எதிரிகளும் சேர்ந்து வாதியை கொலை செய்து விடுவதாக மிரட்டிய குற்றத்திற்காக எதிரிகள் மீது 294(b),323,506(2) IPC r/w 34 IPC படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207 இன் படி எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னர் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 323, 506(2)-ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி வினவிய போது எதிரிகள் குற்றங்களை மறுத்துரைத்தார்கள். எனவே அரசு தரப்பு சாட்சியங்களின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. இந்நிலையில் இவ்வழக்கின் 3 வது எதிரி கடந்த 09/08/2025 ம் தேதியன்று இறந்துவிட்டதாக அரசு தரப்பில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அவரைப் பொறுத்து மட்டும் வழக்கு அற்றுப்போய்விட்டதாக 03/09/2025 ம் தேதி உத்தரவிடப்பட்டுள்ளது.

4. அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ 1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

(5.1) அ.சா.1 சொர்ணலிங்கம் தனது சாட்சியத்தில் கடந்த 15.01.2021 ம் தேதி மாட்டுப்பொங்கல் காலை 11.00 மணிக்கு மந்தையில் பொங்கல் வைத்துக்

கொண்டிருந்தோம் என்றும் தன்னுடைய மகள் நாராயிணி வீட்டிற்கு போகும் போது அவளுக்கும், எதிரிகளுக்கும் பிரச்சினை. எதிரிகள் கோத்தா, கொம்மா என்று பேசி அடிக்க போயிருக்கிறார்கள், பிறகு தன் மகள் வந்துக்கொண்டிருக்கும் போதே அவளுடைய செயினை எதிரிகள் அறுத்திருக்கிறார்கள் என்றும் அதனால் தன் மகள்அழுதுக்கொண்டே வந்து சொல்லிக் கொண்டு இருக்கும் போது எதிரிகள் மந்தைக்கு வந்து என்னை கம்பாலும், கட்டையாலும் மற்றும் கையாலும் அடித்து கோத்தா, கொம்மா, தேவிடியா மகன் என்று சொல்லி அடித்தார்கள் என்றும் அப்போது ஊர்மக்கள் வந்து விலக்கிவிட்டார்கள் என்றும் பின்னர் ஆறாவயல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றும் தன்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனு தான் கொடுத்தது தான் (மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும் எதிரிகளுக்கும் தங்களுக்கும் இந்த குடும்ப பிரச்சினை தொடர்பாக இந்த நீதிமன்றத்தில் வழக்குகள் நடந்துவருகிறது என்றும் போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.2) அ.சா.2 தனலெட்சுமி தனது சாட்சியத்தில் கடந்த 15.01.2021ம் தேதி மாட்டுப்பொங்கல் அன்று காலை 11.00 மணிக்கு 2 முதல் 4 எதிரிகள் வந்து அ.சா.1 ஐ அடித்தார்கள் என்றும் தன் மகள் நாராயிணியின் 7 பவுன் டாலர் செயினை 2 வது எதிரி பாண்டிமீனாள் அறுத்துவிட்டாள் என்றும் பின்னர் 2 முதல் 4 எதிரிகள் தகாத முறையில் பேசி அ.சா.1 ஐ கட்டையாலும், இரும்பு கம்பியாலும் அடித்தார்கள் என்றும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.3) அ.சா.5 ராமு தனது சாட்சியத்தில் கடந்த 17.01.2021-ம் தேதி காலை 11 மணியளவில் அம்மன் கோவில் முன்பாக ஆறாவயல் போலீசார் சம்பவம் இடத்தை பார்த்து மாதிரி வரைபடம் வரைந்து மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும் தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில உள்ள 1 வது கையெழுத்து தன்னுடையது தான்.(மேற்படி பார்வை மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.4) அ.சா.6 ஜானகிராமன் தனது சாட்சியத்தில் இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியாக புலன்விசாரணை மேற்கொண்டு குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்து முதல் தகவல் அறிக்கையை அ.சா.ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் முறையே அ.சா.ஆ-4 மற்றும் 5 ஆகவும் தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார்.

(5.5) அ.சா.7 நாராயனி தனது சாட்சியத்தில் தான் தற்போது சென்னை குரோம்பேட்டையில் வசிக்கிறேன் எதிரிகளை தெரியும் என்றும் கடந்த 15.01.2021 ம் தேதி காலை 11 மணிக்கு மாட்டுப்பொங்கலை ஊரோடு சேர்ந்து உஞ்சனை மங்களத்தில் உள்ள மந்தையில் பொங்கல் வைத்தோம் என்றும் அப்போது எதிரிகள் அனைவரும் தன் அப்பா சொர்ணலிங்கத்தையும் தன் அம்மா தனலெட்சுமியையும் அசிங்கமாக கெட்ட வார்த்தைகளால் பேசினார்கள் என்றும் தன் அப்பாவை

இறந்துபோன 3ம் எதிரி அடித்தார் என்றும் தன் அப்பாவை அடிப்பதை தான் தடுக்கபோனபோது 2 ம் எதிரி என்னை தடுத்து தன் கழுத்தில் இருந்த செயினை அத்துவிட்டார் என்றும் பின்பு 4 பேரும் சேர்ந்து உங்களை கொல்லமால் விடப்போவதில்லை இந்த வீட்டை வீட்டு வெளியே போங்கள் என்று சொல்லி அடிக்கவந்தார்கள் என்றும் ஊரில் உள்ளவர்கள் தடுத்து அவர்களை விலக்கிவிட்டார்கள் என்றும் பின்பு 17ம் தேதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றும் செயின் அத்ததில் தன் கழுத்தில் காயம் ஏற்பட்டது என்றும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்தும், ஆவணங்களிலிருந்தும் எதிரிகளுக்கு பாதகமாகத் தோன்றும் அம்சங்கள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து குவிமுச பிரிவு 313(1)(b) இன் கீழ் வினவ எதிரிகள் சாட்சியங்களை பொய் என மறுத்துரைத்தார்கள். மேலும் எதிரிகள் தமது தரப்பில் சாட்சியங்கள் இல்லை என்று தெரிவித்ததன் அடிப்படையில் எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால், அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்?

**8. தீர்வு**

(8.1) இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் கடந்த 15/01/2021 ஆம் தேதி மாட்டுப் பொங்கல் காலை 11.00 மணிக்கு மந்தையில் பொங்கல் வைத்துக் கொண்டிருந்ததாகவும், தன் மகள் நாராயணி வீட்டிற்கு போகும்போது அவளுக்கும் எதிரிகளுக்கும் பிரச்சனை ஏற்பட்டு எதிரிகள் கோத்தா, கொம்மா என்று பேசி அடிக்கப் போயிருக்கிறார்கள் என்றும் தன் மகள் வந்து கொண்டிருக்கும்போதே அவளுடைய செயினை எதிரிகள் அறுத்து இருக்கிறார்கள் என்றும் அதனால் தன் மகள் அழுது கொண்டே வந்து சொல்லிக் கொண்டிருக்கும்போது எதிரிகள் மந்தைக்கு வந்து தன்னை கம்பாலும் கட்டையாலும் கையாலும் அடித்து கோத்தா, கொம்மா, தேவிடியா மகன் என்று சொல்லி அடித்ததாக அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் சாட்சியமளித்துள்ளார்.

(8.2) கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2 அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் 15/01/2021 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு 2 முதல் 4 எதிரிகள் வந்து அ.சா.1 ஐ அடித்ததாகவும், நாராயணியின் 7 பவுன் டாலர் செயினை 2 வது எதிரி அறுத்து விட்டதாகவும் 2 முதல் 4 எதிரிகள் தகாத முறையில் பேசி அ.சா.1 ஐ கட்டையாலும் இரும்பு கம்பியாலும் அடித்ததாக சாட்சியமளித்துள்ளார். மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.3, 3 வது எதிரி அ.சா.1 ஐ அடித்து விட்டதாக

சொன்னதாகவும் தான் நேரடியாக பார்க்கவில்லை என்றும் பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார்.

(8.3) மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.4, அ.சா.1 சொர்ணலிங்கத்தை 3 வது எதிரி கையால் கன்னத்தில் அறைந்ததாக பிறழ் சாட்சியாக சாட்சியமளித்துள்ளார். மற்றொரு கண்ணுற்ற சாட்சியும் பாதிக்கப்பட்டவருமான அ.சா.7 அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் கடந்த 15/01/2021 ஆம் தேதி காலை 11 மணிக்கு உஞ்சனை மங்களத்தில் உள்ள மந்தையில் பொங்கல் வைத்தபோது எதிரிகள் அனைவரும் தன் அப்பாவையும் அம்மாவையும் அசிங்கமாக கெட்ட வார்த்தைகளால் பேசியதாகவும் தன் அப்பாவை 3 வது எதிரி அடித்ததாகவும் தன் அப்பாவை அடித்ததை தான் தடுக்க போனபோது 2 வது எதிரி தன்னை தடுத்து தன் கழுத்தில் இருந்த செயினை அத்து விட்டதாகவும் பின்பு 4 பேரும் சேர்ந்து உங்களை கொல்லாமல் விடப்போவதில்லை என்று சொன்னதாகவும், செயினை அத்ததில் தன் கழுத்தில் காயம் ஏற்பட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

(8.4) இவ்வழக்கில் கண்ட அ.சா.ஆ.1 புகாரில் 1 வது எதிரியும் 2 வது எதிரியும் தன் மகளை அரிவாளாலும் கட்டையாலும் அடித்ததாகவும் குத்தியதாகவும் பிறகு 2 முதல் 4 எதிரிகள் புகார்தாரரை அடித்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.1 ன்றோ அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் எதிரிகள் கம்பாலும், கட்டையாலும் கையாலும் அடித்ததாக குறிப்பிட்டுள்ளார். ஆனால் அ.சா.1 அவருடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில் 1 வது எதிரி தன்னிடம் எந்த பிரச்சனையும் செய்யவில்லை

என்றும் 1 வது எதிரி தன்னை அடிக்கவில்லை என்றும் முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார். அதேபோல் அ.சா.2 ம் அவருடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில் 1 வது எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 ன்றோ 3 வது எதிரி அ.சா.1 ஐ அடித்ததாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4 கோ 3 வது எதிரி அ.சா.1 ஐ கையால் கண்ணத்தில் அறைந்ததாக மட்டும் சாட்சியம் அளித்துள்ளார்.

(8.5) அ.சா.1 தான் கம்பாலும் கையாலும் தாக்கப்பட்டதாக சொல்லும் நிலையில் அ.சா.1 ன் முதல் விசாரணை சாட்சியத்திலோ அல்லது குறுக்கு விசாரணை சாட்சியத்திலோ அ.சா.1 தனக்கு என்னவிதமான காயங்கள் ஏற்பட்டது என்பது குறித்து எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. அனுமானத்திற்காக கட்டையாலும் கம்பாலும் 3 நபர்கள் சேர்ந்து தாக்கியதாகவே எடுத்துக்கொண்டாலும் சிதைந்த காயமோ அல்லது வீக்க காயங்களாவது ஏற்பட வாய்ப்பு உண்டு. ஆனால் அ.சா.1 ன்றோ தான் மருத்துவமனையில் சிகிச்சை எதுவும் பெறவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.1 அவருடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில் 1 வது எதிரி தன்னை அடிக்கவில்லை என்று சொல்லி இருந்தாலும் அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் பொதுப்படையாக எதிரிகள் கம்பாலும் கட்டையாலும் கையாலும் அடித்ததாக சொல்லியுள்ளார். அதேபோல் அ.சா.2 ன் சாட்சியமும் 2 முதல் 4 எதிரிகள் அடித்தார்கள் என்று பொதுப்படையாகவே அமைந்துள்ளது. அ.சா.1 கம்பாலும் கட்டையாலும் அடித்ததாக சொல்லி உள்ள

நிலையில் அ.சா.2 இரும்பு கம்பியாலும் அடித்ததாக சாட்சியம் அளித்துள்ளார். சம்பவமானது 15/01/2021 ஆம் தேதி சுமார் 11.00 மணியளவில் நடந்ததாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் புகாரில் கண்டுள்ள மேற்குறிப்பின்படி புகார் ஆனது 15/01/2021 ஆம் தேதி 14.00 மணிக்கு பெறப்பட்டு மனு ரசீது 07/2021 கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் முதல் தகவல் அறிக்கையானது 16/01/2021 ம் தேதி 18.30 மணிக்கே பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் 15 ஆம் தேதியே புகார் பெறப்பட்டு மனு ரசீது பதிவு செய்யப்பட்டது என்பதை காண்பிக்க மேற்படி மனு ரசீது அரசு தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. ஆனால் அ.சா.7, 17 ஆம் தேதிதான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் சாட்சியமளித்துள்ளார். மேலும் 16/01/2021 ம் தேதி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையானது 01/02/2021 அன்றே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(8.6) புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே குடும்ப பிரச்சனை தொடர்பாக வழக்குகள் நீதிமன்றத்தில் நடைபெற்று வருவது அ.சா.1 னாலேயே அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் புகாரிலும் அ.சா.1 க்கும் 1 வது எதிரிக்கும் குடும்ப பிரச்சனை இருந்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் இடையே ஏற்கனவே பிரச்சனை இருந்து வரும் நிலையில் அ.சா.1 ன் சாட்சியத்தை உறுதிப்படுத்தும் விதமாக சாட்சியம் அமைய வேண்டியது அவசியமாக உள்ளது.

ஆனால் இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 ன் மனைவியான அ.சா.2 ன் சாட்சியமும் அவருடைய மகளுமான அ.சா.7 ன் சாட்சியமுமே ஒன்றுக்கொன்று உறுதிப்படுத்தும் விதமாக அமையவில்லை. அ.சா.1, 2 மற்றும் 7 ஆகியோருக்கு ஏற்கனவே எதிரிகளுடன் குடும்ப பிரச்சனை இருந்து வந்து வழக்கின் முடிவில் ஆர்வமுள்ள சாட்சிகளாக உள்ள நிலையில் தனிநபர் சாட்சியான அ.சா.3 சம்பவத்தை தான் நேரடியாக பார்க்கவில்லை என்று பிறழ் சாட்சியாக சாட்சியமளித்துள்ளார். மற்றொரு தனிநபர் சாட்சியான அ.சா.4 அ.சா.1 ஐ 3 வது எதிரி கையால் கன்னத்தில் அறைந்ததாக அரசு தரப்பு வழக்கத்திற்கு விரோதமாக பிறழ் சாட்சியாக சாட்சியமளித்துள்ளார். அ.சா.4 பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ள போதிலும் 3 வது எதிரி மட்டுமே அ.சா.1 ஐ தாக்கியதாக சாட்சியமளித்துள்ளதும் ஏனைய எதிரிகள் அ.சா.1 ஐ தாக்கியதாக எந்த சாட்சியமும் அளிக்கவில்லை என்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

(8.7) அதேசமயம் இவ்வழக்கில் மற்றொரு பாதிக்கப்பட்ட நபரும் கண்ணுற்ற சாட்சியுமான அ.சா.7 அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் தன் அப்பாவை இறந்து போன 3 வது எதிரி அடித்ததாகவும் தன் அப்பாவை அடித்ததை தான் தடுக்க போனபோது 2 வது எதிரி தன்னை தடுத்து தன் கழுத்தில் இருந்த செயினை அறுத்துவிட்டார் என்றும் செயின் அத்ததில் தன் கழுத்தில் காயம் ஏற்பட்டது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். ஆக, அ.சா.7 ம் 1, 2, 4 எதிரிகள் அ.சா.1 ஐ தாக்கியதாக எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. 2 வது எதிரி செயினை இழுத்து அத்து தனக்கு

கழுத்தில் காயம் ஏற்பட்டதாக அ.சா.7 சாட்சியம் அளித்துள்ள போதிலும் அதனை உறுதிப்படுத்தும் விதமாக எந்த மருத்துவ ஆவணங்களும் அமையவில்லை. அ.சா.7 2 வது எதிரி தன் செயினை அத்ததாக சொல்லும் சாட்சியத்தை உறுதிப்படுத்தும் விதமாக இவ்வழக்கில் வேறு எந்த தனிநபர் சாட்சியங்களும் அமையவில்லை. புகார்தாரரான அ.சா.1 ன் சாட்சியத்திலும் எதிரிகள் அ.சா.7 ன் செயினை அத்ததை தான் நேரடியாக பார்த்ததாக எந்த சாட்சியமும் அளிக்கவில்லை.

(8.8) அ.சா.1 எதிரிகள் அசிங்கமாக பேசியதாக சாட்சியம் அளித்துள்ளபோதிலும் அதனால் அருவருப்பு உணர்வு அடைந்ததாக எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. அ.சா.2 ஓ தகாத முறையில் பேசியதாக மட்டுமே சாட்சியம் அளித்துள்ளார். என்ன வார்த்தைகள் பேசினார்கள் என்பது குறித்த சாட்சியம் அளிக்கவில்லை. அதேபோல் அ.சா.7 ம் அசிங்கமான கெட்ட வார்த்தைகளால் பேசியதாக மட்டுமே சாட்சியம் அளித்துள்ளார். என்ன வார்த்தைகள் பேசினார்கள் என்பது குறித்து சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.1, 2 ஆகியோர் எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்ததாக எந்த சாட்சியமும் அளிக்காத நிலையில் அ.சா.7 மட்டும் எதிரிகள் நால்வரும் உன்னை கொல்லாமல் விடபோவது இல்லை என்று கூறியதாக சாட்சியம் அளித்துள்ளார். இருப்பினும் அதனால் அச்ச உணர்வு அடைந்ததாக எந்த சாட்சியமும் அமையவில்லை. எனவே மேற்கண்ட காரணங்களையும், முரண்பாடுகளையும், சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் கருத்தில்கொள்கையில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு

நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. எனவே எதிரிகள் சந்தேகத்தின் பலனைப் பெற தகுதியுடையவர்கள் ஆகிறார்கள்.

**9) முடிவாக, 1,2,4 வது எதிரிகள் இதச பிரிவுகள் 294(b), 323, 506(2)-ன் கீழ் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து எதிரிகளை மேற்படி குற்றச்சாட்டுக்களைப் பொறுத்து குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஜுன் திங்கள் 05-ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

POORNIMA Digitally signed by POORNIMA Date: 2026.06.05 19:03:06 +0530

**நீதித்துறை நடுவர்**

**தேவகோட்டை.**

**அரசு தரப்பு சாட்சிகள்:**

| S.No | Witness of the Prosecution | How examined | Description of the Witness |
|---|---|---|---|
| 1. | சொர்ணலிங்கம் | அ.சா.1 | புகார்தாரர் |
| 2. | தனலெட்சுமி | அ.சா.2 | கண்ணுற்ற சாட்சி |
| 3. | சுப்பிரமணி | அ.சா.3 | கண்ணுற்ற சாட்சியாக பட்டியலிடப்பட்டு பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார். |
| 4. | நடேசன் | அ.சா.4 | கண்ணுற்ற சாட்சியாக |

| | | | |
|---|---|---|---|
| | | | பட்டியலிடப்பட்டு பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார். |
| 5. | ராமு | அ.சா.5 | பார்வை மகஜர் சாட்சி |
| 6. | ஜானகிராமன் (சார்பு ஆய்வாளர்) | அ.சா.6 | விசாரணை அதிகாரி |
| 7. | நாராயனி | அ.சா.7 | கண்ணுற்ற சாட்சி |

## Judicial Form No. 68

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| S.No | Description of the exhibit | Date when the exhibit was filed in the case | How marked | By whom filed | Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | புகார் மனு | 17/06/2025 | அ.சா.ஆ.1 | அரசு தரப்பு | அசல் |
| 2. | பார்வை மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து | 04/08/2025 | அ.சா.ஆ.2 | அரசு தரப்பு | அசல் |
| 3. | முதல் தகவல் அறிக்கை | 17/02/2026 | அ.சா.ஆ.3 | அரசு தரப்பு | அசல் |
| 4. | மாதிரி வரைபடம் | 17/02/2026 | அ.சா.ஆ.4 | அரசு தரப்பு | அசல் |
| 5. | பார்வை மகஜர் | 17/02/2026 | அ.சா.ஆ.5 | அரசு தரப்பு | அசல் |

**அரசு தரப்பு சான்றுப் பொருள்: இல்லை**

**எதிரிகள் தரப்பு சாட்சி,சான்றாவணம், சான்றுப் பொருள் - இல்லை**

POORNIMA Digitally signed by POORNIMA Date: 2026.06.05 19:03:14 +0530

**நீதித்துறை நடுவர்**

**தேவகோட்டை.**

**<u>பின்குறிப்பு:-</u>**

1. எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்.

2. வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

3.விசாரணை காலத்தில் சாட்சிகள் யாரும் 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.